வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
முன்னிலை – திரு.சா.மார்ஸ்.
மு.மு.எண்.8933/ அ1/2019 நாள். .05.2020

பொருள்: தமிழ்நாடு பொதுசார்நிலைப்பணி – வேலூர் மாவட்டம் – திருமால்பூர் அரசு மேனிலைப் பள்ளி – இளநிலை உதவியாளர் திரு.ரா.செல்வகுமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 27.04.2012 முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – சார்பு

பார்வை :

1. அரசாணை எண்191/பொதுத் துறை நாள்01.2.1962
2. அரசு கடிதம் எண் 6483/73–3 பொது நாள் 30.07.1983
3. அரசாணை எண்.101 பள்ளிக்கல்வி(நிதி)துறை நாள்.18.05.2018
4. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு துணைச் செயலரின் கடித ந.க.எண்.5064/PSD-D1/2012 நாள்.27.12.2012
5. வேலூர், மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.645/ அ1/2012 நாள். 27.04.2012
6. திருமால்பூர் தலைமையாசிரியரின் கடிதம் ந.க.எண்.156/2019, நாள். 12 .19

-------

வேலூர் மாவட்டம், திருமால்பூர் அரசு மேனிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ரா.செல்வகுமார் என்பாருக்கு பார்வை(4)ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழு துணை செயலர் அவர்களின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளர் பணிக்கு தெரிவு செய்யப்பட்டு, பார்வை(5)ல் காணும் வேலூர், மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நியமனம் அளிக்கப்பட்டு 27.04.2012 முற்பகல் முதல் தொடர்ந்து பணிபுரிந்து வருவதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன் முறை செய்து ஆணை வேண்டிய கருத்துருவினை பார்வை (6)ல் காணும் தலைமையாசிரியர் பரிந்துரையின் அடிப்படையில் இவ்வலுவலகம் பெறப்பட்டுள்ளது.

பார்வை (1) (2) (3) ல் காணும் அரசாணை மற்றும் அரசு கடிதங்களின்படியும் , பார்வை (6) ல் காணும் சார்ந்த தலைமையாசிரியர் பரிந்துரையின்அடிப்படையிலும் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் கீழ்காணும் இளநிலை உதவியாளருக்கு அவரின் பெயருக்கு எதிரே குறிப்பிட்ட நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப் படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | ஊதியமில்லா விடுப்பு நாள் | இளநிலை உதவியாளர் பதவியல் பணிவரன்முறைப் படுத்திய நாள் |
|---|---|---|---|---|
| 01 | திரு.ரா.செல்வகுமார், இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப் பள்ளி, திருமால்பூர், வேமா. | 27.04.2012 முற்பகல் | --- | 27.04.2012 முற்பகல் |

பணிவரன்முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பணி முடித்து துறைத்தேர்வுகள் மற்றும் பவானிசாகர் பயிற்சி முடித்து தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்யவேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்காண் பொருள் சார்ந்து அன்னாரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகள் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பணிப்பதிவேடு

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் – சம்பந்தப்பட்ட பணியாளர் ( உரிய தலைமையாசிரியர் மூலமாக)
நகல் – தலைமையாசிரியர். அரசு மேல்நிலைப் பள்ளி, திருமால்பூர்.

தலைமை ஆசிரியர்
அரசினர் மேநிலைப் பள்ளி
திருமால்பூர்-631051.
இராணிப்பேட்டை மாவட்டம்.